RT-23141919IN
12/4/19

بسمہ تعالیٰ شانہٗ

# தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்

# تمل ناڈو مسلم منیتر کزگم

# TAMILNADU MUSLIM MUNNETRA KAZHAGAM

தேதி :

2959

**தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 9(1)-ன்**

**கீழ் முதல் மேல் முறையீட்டு மனு**

(பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்)

12-04-2019

**விடுநர் :**

**C.O. அம்ஜத் உசேன்,**
.No. 38, பாக்கியாத் தெரு,
மாவட்ட உலமா அணி துணை செயலாளர்,
தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றகழகம்,
வேலூர்-632 004.
**செல் : 9500330124.**

**பெறுநர் :**

**திருமிகு. மேல் முறையீட்டு அலுவலர் அவர்கள்,**
தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005,
மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்,
மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
வேலூர் - 632 009.

**அன்புடையீர்,**

**பொருள் :** தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 9(1)ன் கீழ் முதல் மேல் முறையிட்டு மனு.

**பார்வை :**

1) எனது தகவல் பெறும் உரிமைச்சட்டம் விண்ணப்பம் நகல் தேதி 20.02.2019.
2) மேற்படி விண்ணப்பம் தொடர்பாக அன்னம்மா மெர்சி மார்க்ஸ் B.A., B.Ed., முதல்வர், ஸ்ரீ மனு மகிஜா நினைவு சிருஷ்டி மெட்ரிக் பள்ளி, செங்குட்டை, காட்பாடி அவர்களின் 11.03.2019 தேதியிட்ட பதில் கடிதம். ந.க. எண். 05/2018-2019, நாள் 11.03.2019
3) எஸ். பூர்ணிமா, M.Com., M.Phil., B.Ed., முதல்வர், சிருஷ்டி மெட்ரிக் பள்ளி, வேலூர் - 632 014.

74/50, Bogipattarai Street, Bangalore Road, Vellore - 632004. E-mail : tmmkvelloredt@yahoo.in (www.tmmk.in)
Head Office, No.7,Vadamariacoir Street, Chennai - 1. Phone : 044 - 25247824 / Fax : 25223868.

Scanned by CamScanner

அவர்களின் 11.03.2019 தேதியிட்ட பதில் கடித நகல்,
ந.க.எண். 05/2018-19, நாள் : 11.03.2019.

4) Shukoor Matriculation Hr.Sec.School, Ambur, அவர்களின் 3 பக்க பதில் கடிதம்.

5) திரு. முதல்வர் ஆகாஷ் வித்தியாலயா மெட்ரிக்பள்ளி, திருப்பத்தூர் அவர்களின் 19.03.2019 தேதியிட்ட பதில் கடித நகல்.

6) அல்-அமீன் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி, திருப்பத்தூர் அவர்களின் 12.03.2019 தேதியிட்ட பதில் கடித நகல் (முகப்பு பக்கம் மட்டும்).

வணக்கம் நான் மேற்க்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 20.02.2019 தேதியிட்ட எனது தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் விண்ணபத்தில் பொது தகவல் அலுவலர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்திற்கு இரண்டு வரிசை எண்களில் மட்டும் தகவல் கேட்டு இருந்தேன். சுருக்கமாக

**தகவல் எண். 1**

வேலூர் மாவட்டத்திற்குட்பட்ட பகுதியில் செயல்பட்டு வரும் தனியர் மெட்ரிக்பள்ளியில் ஆரம்ப வகுப்பு முதல் இறுதி வகுப்பு வரை 2017-2018, 2018-2019 அரசு நிர்ணயம் செய்துள்ள கல்வி கட்டணம், கட்டணம் வசூலித்தல் சம்பந்தமான பராமரிப்பு ஆவணம், பில் ரசீதுகள் தொடர்பான ஆவண நகல் கேட்டு இருந்தேன்.

**தகவல் எண். 2**

வேலூர் மாவட்டத்திற்க்குட்பட்ட பகுதியில் செயல்பட்டு வரும் தனியர் மெட்ரிக்பள்ளியில் 2018-2019 கல்வி ஆண்டில் வகுப்பு வாரியாக, ஆசிரியர், மாணவர், ஆசிரியர் அல்லாத பணியாளர் எண்ணிக்கை கல்வி தகுதி, பெயர், முகவரி, பள்ளியில் சேர்ந்த விவரம், மாத ஊதியம் ஆகியவை கேட்டு இருந்தேன்.

மேற்படி எனது விண்ணபத்தில் கேட்ட தகவல்களுக்கு வேலூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள தனியார் பள்ளிகளில், பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகளில் வரிசை எண். 2 முதல் 6 வரையிலான 5 பள்ளிகள் மட்டுமே பதில் அளித்துள்ளனர். இதில் பார்வை 6-ல் உள்ள அல் அமீன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திருப்பத்தூர், மட்டுமே முழுமையான தகவலை அளித்துள்ளனர். அதேப்போல் பார்வை எண். 2 மற்றும் 3-ல் உள்ள சிருஷ்டி பள்ளிகள் மற்றும் பார்வை 4-ல் உள்ள சுக்கூர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஆம்பூர், பார்வை 5-ல் உள்ள ஆகாஷ் வித்தியாலயா மெட்ரிக்பள்ளி, திருப்பத்தூர், ஆகிய பள்ளிகள் முழுமையற்ற தகவலை தந்து ஏமாற்றி உள்ளனர்.

Scanned by CamScanner

بسمہ تعالیٰ شانہٗ

# தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்

تَمِلْ نَاڈُو مُسْلِمْ مُنّیتْرَ کَزَگَمْ

# TAMILNADU MUSLIM MUNNETRA KAZHAGAM



மேலும் தகவல் எண். 1-ல் கோரப்பட்டுள்ள 2017-2018, 2018-2019, கல்வி ஆண்டுக்கான கல்வி ஆண்டுக்கான கல்வி கட்டணம், கல்வி கட்டணம் வசூல் சம்மந்தமான ஆவண கோப்புகள் வழங்கப்படவில்லை அதேப்போல் தகவல் எண். 2-ல் உள்ள முழுமையான தகவல்களை பார்வையில் குறிப்பிட்டுள்ள வரிசை எண். 2, 3, 4 மற்றும் 5-ல் உள்ள பள்ளிகள் முழுமையான தகவல்களை வழங்க உத்திரவிட்டும் அதேபோல் தகவலே அளிக்காமல் உள்ள வேலூர் மாவட்டத்தில் உள்ள மற்ற பள்ளிகளும் சரியான தகவலை அளிக்க உத்திரவிட வேண்டி கேட்டுக்கொள்கிறேன். மேலும் இம்மனு தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 19(1)-ன் கீழ் இந்த முதல் மேல் முறையீடாக தங்களுக்கு செய்யப்படுகிறது.

ஆகவே மேற்படி துறையின் பொதுத்தகவல் அலுவலரால் அளிக்கப்படாத மேற்குறிப்பிட்ட தகவல்களை முழுமையாக சட்டப்பிரிவு 7(6)-ன் படி செலவுத் தொகையின்றி எனக்கு அளிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

Amjath

(C.O. அம்ஜத் உசேன்)

**இணைப்பு :**

**பார்வையில் கண்டுள்ள நகல்கள்**

**மொத்த எண்ணிக்கை –** 22

74/50, Bogipattarai Street, Bangalore Road, Vellore - 632004. E-mail : tmmkvelloredt@yahoo.in (www.tmmk.in)

Head Office, No.7,Vadamariacoir Street, Chennai - 1. Phone : 044 - 25247824 / Fax : 25223868.

Scanned by CamScanner